**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 71 /2024 , Mangalamedu P.S. PW -1.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | லெட்சுமி | Nationality | : | இந்தியன் |
| Father/ Husband Name | : | பாலகிருஷ்ணன் | Calling | : | விவசாயம் |
| Village | : | பெருமத்தூர் | Religion | : | - |
| Taluk | : | குன்னம் | Age | : | 40/2026 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 03.03.2026 | | | | | |

2–ம் எதிரி மட்டும் ஆஜர். 1–ம் எதிரி தனியாக பிரிக்கப்பட்டுள்ளது. 3 ம் எதிரி இறந்துவிட்டார்.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது உறவினர் ஆவார். சுமார் 4 வருடத்திற்கு முன்பு ஒருநாள் தேதி மாதம் நினைவில்லை, மாலை 6 மணிக்கு சுமார் 7,8 பேர் கூட்டமாக எனது வீட்டின் முன்பாக இருந்தார்கள். அப்போது கூட்டத்தில் இருந்த யாரோ ஒருவர் என்னையும், என் கணவரையும் அடித்துவிட்டார்கள். கூட்டமாக இருந்ததால் யார் அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. மேற்படி சம்பவத்தில் காயம்பட்ட நானும், எனது கணவரும் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தோம். சிகிச்சை முடித்து மங்களமேடு காவல் நிலையத்தில் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது. (**புகார் மனுவில் உள்ள கையெழுத்து அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). மேற்படி புகாரில் உள்ள விபரங்கள் எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க **சாட்சி பிறழ் சாட்சியாக** கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கபட்டார்).

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை** :–

1. போலீசார் விசாரணையில் கடந்த 24.05.2021 ம் தேதி மாலை 5.30 மணியளவில் எனது வீட்டில் இருந்தபோது எங்கள் இடத்தில் இருந்த கருவேல மரத்தினை கொளஞ்சியப்பா வெட்டியதாக கேள்விப்பட்ட எனது கணவர் கேட்க சென்றபோது கொளஞ்சியப்பா , ராமசாமி, செல்லமுத்து, சூர்யா ஆகியோர் அசிங்கமாக திட்டி என்னையும் என் கணவரையும்

அடித்து கொலை மிரட்டல் விடுத்தார்கள்எ ன்று போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு அனுசரனையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCUM COURT, KUNNAM

**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM</u>**

| **C.C.No. 71 /2024 , Mangalamedu P.S. PW -2.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாலகிருஷ்ணன் | Nationality | : | இந்தியன் |
| Father/ Husband Name | : | சுப்ரமணியன் | Calling | : | விவசாயம் |
| Village | : | பெருமத்தூர் | Religion | : | - |
| Taluk | : | குன்னம் | Age | : | 53/2026 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 03.03.2026 | | | | | |

2–ம் எதிரி மட்டும் ஆஜர். 1–ம் எதிரி தனியாக பிரிக்கப்பட்டுள்ளது. 3 ம் எதிரி இறந்துவிட்டார்.

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>** :-

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது உறவினர் ஆவார். அ.சா.1 ஐ தெரியும். அ.சா.1 எனது மனைவி. சுமார் 4 வருடத்திற்கு முன்பு ஒருநாள் தேதி மாதம் நினைவில்லை, மாலை 6 மணிக்கு சுமார் 7,8 பேர் கூட்டமாக எனது வீட்டின் முன்பாக இருந்தார்கள். அப்போது கூட்டத்தில் இருந்த யாரோ ஒருவர் என்னையும், என் மனைவியையும் அடித்துவிட்டார்கள். கூட்டமாக இருந்ததால் யார் அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. மேற்படி சம்பவத்தில் காயம்பட்ட நானும், எனது மனைவியும் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தோம். சிகிச்சை முடித்து மங்களமேடு காவல் நிலையத்தில் சென்று அ.சா.1 புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க **சாட்சி பிறழ் சாட்சியாக** கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கபட்டார்).

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>** :–

1. போலீசார் விசாரணையில் கடந்த 24.05.2021 ம் தேதி மாலை 5.30 மணியளவில் எனது வீட்டிடில் இருந்தபோது எங்கள் இடத்தில் இருந்த கருவேல மரத்தினை கொளஞ்சியப்பா வெட்டியதாக கேள்விப்பட்ட நான் கேட்க சென்றபோது கொளஞ்சியப்பா , ராமசாமி, செல்லமுத்து, சூர்யா ஆகியோர் அசிங்கமாக திட்டி என்னையும் என் மனைவியையும் அடித்து கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்று போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால்

DMCUMJM COURT KUNNAM

அவர்களுக்கு அனுசரனையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCUMJM COURT, KUNNAM

DMC CUM COURT, KUNNAM

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 71 /2024 , Mangalamedu P.S. PW -3.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தமிழரசி | Nationality | : | இந்தியன் |
| Father/ Husband Name | : | அய்யாசாமி | Calling | : | விவசாயம் |
| Village | : | பெருமத்தூர் | Religion | : | - |
| Taluk | : | குன்னம் | Age | : | 57 /2026 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 03.03.2026 | | | | | |

2–ம் எதிரி மட்டும் ஆஜர். 1–ம் எதிரி தனியாக பிரிக்கப்பட்டுள்ளது. 3 ம் எதிரி இறந்துவிட்டார்.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் கண்டுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். மேற்படி கையெழுத்தை சுமார் 3 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் ஞாபகம் இல்லை, இரவு 11 மணிக்கு எனது வீட்டில் வந்து போலிசார் கையெழுத்து வாங்கினார்கள். என்னுடன் எனது அக்கா மகன் மணிகண்டன் என்பவரும் கையெழுத்து செய்தார். அதில் என்ன எழுதி உள்ளது என்று எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் நான் முதலாவது கையெழுத்தும் 2 வது கையெழுத்து மணிகண்டன் என்பவரும் செய்தோம். **(பார்வை மகஜரில் அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை** :–

1. போலீசார் விசாரணையில் கடந்த 26.05.2021ம் தேதி 16.30 மணிக்கு எங்கள் முன்னிலையில் மங்களமேடு போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் மேற்படி பார்வை மகசரில் நானும் சூர்யா என்பவரும் கையெழுத்து செய்து கொடுத்தோம் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் தங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களை வழக்கில் இருந்து காப்பாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCOURT,KUNNAM

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 71 /2024 , Mangalamedu P.S. PW -4.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சூர்யா | Nationality | : | இந்தியன் |
| Father/ Husband Name | : | செல்லமுத்து | Calling | : | விவசாயம் |
| Village | : | பெருமத்தூர் | Religion | : | - |
| Taluk | : | குன்னம் | Age | : | 22 /2026 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 03.03.2026 | | | | | |

2–ம் எதிரி மட்டும் ஆஜர். 1–ம் எதிரி தனியாக பிரிக்கப்பட்டுள்ளது. 3 ம் எதிரி இறந்துவிட்டார்.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் கண்டுள்ள 2–வது கையொப்பம் என்னுடையது தான். மேற்படி கையெழுத்தை சுமார் 3 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் ஞாபகம் இல்லை, இரவு 11 மணிக்கு எனது வீட்டில் வந்து போலிசார் கையெழுத்து வாங்கினார்கள். என்னுடன் எனது பெரியம்மா தமிழரசி என்பவரும் கையெழுத்து செய்தார். அதில் என்ன எழுதி உள்ளது என்று எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் நான் முதலாவது கையெழுத்தும் 2 வது கையெழுத்து மணிகண்டன் என்பவரும் செய்தோம். **(பார்வை மகஜரில் அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை** :–

1. போலீசார் விசாரணையில் கடந்த 26.05.2021ம் தேதி 16.30 மணிக்கு எங்கள் முன்னிலையில் மங்களமேடு போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் மேற்படி பார்வை மகசரில் நானும் தமிழரசி என்பவரும் கையெழுத்து செய்து கொடுத்தோம் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் தங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களை வழக்கில் இருந்து காப்பாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை

| |
|---|
| Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.<br><br>District Munsif - Cum - Judicial Magistrate,<br>Kunnam. |

DMCUMJMKUNNAM

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 71/2024 , Mangalamedu P.S. PW -5.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கலியமூர்த்தி | Nationality | : | -இந்தியன் |
| Father/ Husband Name | : | ஆறுமுகம் | Calling | : | உதவி ஆய்வாளர் |
| Village | : | கல்குணம் | Religion | : | - |
| Taluk | : | கடலூர் மாவட்டம். | Age | : | 59 /2026 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 03.03.2026 | | | | | |

2–ம் எதிரி மட்டும் ஆஜர். 1–ம் எதிரி தனியாக பிரிக்கப்பட்டுள்ளது. 3 ம் எதிரி இறந்துவிட்டார்.

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் தற்போது மங்களமேடு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். உதவி ஆய்வாளர் திருமதி. செந்தமிழ் செல்வி அயல் பணியாக சென்றுள்ளதால், அவரது கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். நான் வழக்குக் கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 26.05.2021 ம் தேதி லெட்சுமி க/பெ. பாலகிருஷ்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று அதன் தன்மைக்கேற்ப மங்களமேடு காவல் நிலைய குற்ற எண். 385/2021, இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2) ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். (**உதவி ஆய்வாளரால் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ 4 ஆகவும், புகார் அ.த.சா.ஆ 5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**). அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சாட்சிகள் தமிழரசி, சூர்யா என்பவர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம், பார்வை மகசர் முறையே அ.த.சா.ஆ 6 மற்றும் அ.த.சா.ஆ 7 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

2. பின்னர் எதிரிகள் மூவரும் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் அவர்களை கைது செய்யவில்லை. சாட்சிகள் லெட்சுமி, தமிழரசி, மணிகண்டன், பூவா, பாலகிருஷ்ணன், ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றுள்ளார். (**மருத்துவரால் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று அ.த.சா.ஆ 8 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.) இவ்வழக்கில் சாட்சிகளை விசாரணை செய்ததிலிருந்து சூர்யா என்பவர் குற்ற சம்பவத்தில் ஈடுபடவில்லை என

தெரியவந்ததால் அவரை இவ்வழக்கில் இருந்து நீக்கம் செய்து நீக்கல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். (**உதவி ஆய்வாளரால் தாக்கல் செய்யப்பட்ட எதிரி நீக்கல் அறிக்கை அ.த.சா.ஆ 9 ஆக** குறியீடு செய்யப்படுகிறது).

3. பின்னர் இவ்வழக்கில் தனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது மேற்கண்ட அதே பிரிவுகளின் கீழ் 14.07.2021 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. எதிரிகள் கொடுத்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை பெற்று வழக்கு பதிவு செய்து சரிவர புலன் விசாரணை செய்யாமல் இந்த எதிரிகள் மீது தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCUJM COURT, KUNNAM